O/L
5, 6, 7, 8, 9-ம் வகுப்புகள்
ஆரம்பம்
5-1-1987
Bond INSTITUTION
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

விலை ரூ-1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L
Economics - Mr. கலாகரன்
Accounts - Mr. சௌந்தி
Logic – Mr. கேசவன்
Commerce-Mr. கேதீஸ்வரன்
Hindn Civil) Mr. தாஸ்
Tamil)
Political Science-Mr. சீலன்
Geography-Mr. சன்
Bond INSTITUTION
58A, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அகஸ்தியர் மார்கழி மீ 20 ஞாயிற்றுக்கிழமை ஸிஷ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 3 (4 1-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 35

எரிபொருள் தடை எதிரொலி

போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிக்கும் அபாயம்

நேற்றே சேவைகள் குறைந்தன; இரண்டொரு தினங்களில் நிலைமை மேலும் மோசமாகும்

யாழ்ப்பாணம், ஜனவரி 4

எரிபொருள் தடைவிதிக்கப்பட்டதன் எதிரொலியாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் போக்குவரத்துச் சேவை முற்றாக ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்றே வாகனப் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டது. இரண்டொரு தினங்களில் நிலைமை மேலும் மோசமாகும் என அறியவருகிறது.

காலையில் வாகனப் போக்குவரத்துச் சுமாராக இருந்த போதிலும் மாலையில் பெரிதும் குறைந்தது. மினிபஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன. வ. பி. போ. ச. யின் உள்ளூர் பஸ்சேவைகள் சகலதும் நிறுத்தப்பட்டிருந்தன.

தனியார் மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் வீதிகளில் குறைவாகவே காணப்பட்டன.

இதேவேளை நாளை தொடக்கம் பஸ் சேவைகள் முற்றாக ஸ்தம்பிக்கும் என அறிவிக்கப்பட்டது.

எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் எதிலும் நேற்று விற்பனை நடக்கவில்லை.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கொண்டாவில் டிப்போ வுக்காகக் கொண்டுவரப்பட்ட எரிபொருள் வவுனியாவில் வைத்து ஆயுதபடையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது மூன்று பஸ்களில் 5,000 லீற்றர் எரிபொருள் கொண்டு வரப்பட்டது

இது குறித்து போக்குவரத்து அமைச்சருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் தற்போது கொழும்பில் தங்கி இருக்கிறார்.

கோண்டாவில் டிப்போவில் இருக்கும் எரிபொருள் ஒரு நாள் போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்கு மட்டுமே போதுமானது என்று திரு. கனகரத்தினம் தெரிவித்தார்

டீசல், பெற்றோல், தட்டுப்பாட்டை அடுத்து மண்ணெண்ணையும் பதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(அ-ஏ-10-5)

குண்டுவெடிப்பு பாலம் சேதம்

சென்னை, ஜன.

தமிழ்நாட்டில் சேலம்-வளாஞ்துப்பேட்டை நெடுஞ்சாலையில் உள்ள பெரிய கிருஷ்ணபுரம் பாலம் குண்டுவெடிப்பில் சேதமடைந்தது இச் சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது (இ-ஏ)

(3 ஆம் பக்கமும் பார்க்க)

ஆனையிறவு முகாமில் சிப்பாய்களின் கெடுபிடி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன 4

ஆனையிறவு இராணுவ முகாமில் பயணிகள் பலத்த சோதனையிடப்படுகின்றனர்.

கடந்த இரண்டு நாட்களாக ஆரம்பித்திருக்கும் இந்தக் கெடுபிடிகள் காரணமாக தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் பெரிதும் தாமதப்படுகின்றன.

ஆண்கள், பெண்கள் என வேறுபாடின்றி அனைவரும் பஸ்களை விட்டுக் கீழே இறக்கப்பட்டு கைப்பைகள் உட்பட அனைத்தும் பலத்த சோதனையிடப்படுகின்றன.

கூடியளவு குடாநாட்டை விட்டு வெளியேறும் பஸ் பிரயாணிகளுக்கே இந்தக் கதி ஏற்பட்டுள்ளது. (இ-10)

வான், பஸ் சேவை இல்லாட்டால் சைக்கிளும், கால்களுமே கதி என்று சமாளிக்க வேண்டியது தானே..!

ஹபறணைக்கு பஸ்

யாழ்ப்பாணம் ஜன 4

யாழ்ப்பாணத்தில் இருந்து ஹபறணைக்கு கடந்த வாரம் முதல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

தினமும் காலை 5 45 மணி அளவில் யாழ் மத்திய பஸ் நிலையத்திலிருந்து இந்த பஸ் புறப்படுகிறது.

ஆசனப் பதிவுகளும் பஸ் நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. (இ-10)

முல்லைத்தீவில் மின்சாரம் இல்லை

யாழ்ப்பாணம் ஜன. 4

இரண்டு நாட்களாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை

முல்லைத்தீவு இராணுவ முகாம்களுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டு இருப்பதாதவும் ஏனைய பகுதிகள் இருளில் மூழ்கி இருப்பதாகவும் தெரிய வருகிறது.

உண்மையிலேயே மின்சாரத்தடைதானா அல்லது அரசினால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட மின்சாரத் தடையா? என பொது மக்கள் அங்கலாய்க்கின்றனர். (இ-10)

கிழக்கில் மேலும் 3 அதிரடிப்படை முகாம்கள்

கொழும்பு, ஜன 4

40 லட்சம் செலவில் மூன்று அதிரடிப்படை முகாம்கள் கிழக்கு மாகாணத்தில் திறக்கப்பட வுள்ளன.

இவற்றுடன் அதிரடிப் படை முகாம்களின் எண்ணிக்கை 13ஆக கிழக்கில் அதிகரிக்கும்.

தற்போது உள்ளகளுவாஞ்சிக்குடி, திருக்கோவில், அக்கரைப்பற்று, கல்லடி, கிரான், மொறக்கொட்டாஞ்சேனை, கரடியனாறு, வாழைச்சேனை, வவுணதீவு, அதிரடிப்படை முகாம்களில் சுமார் 1500 கொமாண்டோக்கள் உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவ பலத்தை அதிகரிக்கும் சட்டத்தின் ஒரு கட்டமாகவே புதிய அதிரடிப்படை முகாம்கள் நிறுவப்படும். (இ-ஏ)

சுபநேரம்

04 01-1987

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

9. 31 முதல் 11 01 வரை

ராகுகாலம்:

5.01 முதல் 6.31 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

வாகனவரி வசூலிப்பு நிறுத்தப்பட்டாலேயே எரிபொருள்தடை நீங்குமாம்

கொழும்பு, ஜன. 4

வாகன வரி வசூலிப்பு நிறுத்தப்படும் வரை வடபகுதிக்கான எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டே இருக்கும்.

இப்படி அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்பு 'டெயிலி நியூஸ்' ஆங்கில நாளிதழ் நேற்றுச் செய்தி வெளியிட்டது

வடபகுதியில் உள்ள எரிபொருள் கொஞ்ச காலத்துக்கே போதும் அதன் பின்னர் தவியார், அரச போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பித நிலையை அடைந்துவிடும்.

பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்காக வருந்துகிறோம் --

இப்படி அரசுப் பேச்சாளர் மேலும் சொன்னார். (இ-ஏ)

அரசின் உத்தரவையே செயற் படுத்துகிறோம் என்கிறார் மேஜர் விஜேய சூரியா

யாழ்ப்பாணம், ஜன.4

வடபிராந்திய போக்குவரத்துச்சபையில் எமக்கு எதுவித கோபமுமில்லை அரசின் உத்தரவையே நாம் செயற்படுத்துகிறோம்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் பலாலி இராணுவ முகாமுக்கு டீசல் பேர்மிட் பெறச் சென்ற பொழுது மேஜர் விஜய சூரியா இவ்வாறு சொன்னார்.

அரசு எமக்கு இட்ட உத்தரவை வாபஸ் பெறுமானால் அடுத்த நிமிடமே நான் எரிபொருள் பேர்மிட் வழங்குவேன்

இவ்வாறு அவர் மேலும் சொன்னார். (இ10)

பெற்றோல் 50 ரூபா

யாழ்ப்பாணம், ஜன.4

வடபகுதிக்கான எரிபொருள் தடையை சாதகமாகப் பயன்படுத்தி பெற்றோல், டீசல் என்பன நேற்று யாழ்நகரில் அதிக விலைக்கு விற்கப்பட்டன.

ஒரு போத்தல் பெற்றோல் 50 ரூபாவுக்கு விற்ற நபர் ஒருவரை இளைஞர்கள் எச்சரித்ததை தொடர்ந்து உடனடியாக நியாய விலைக்கு அந்த நபர் பெற்றோலை விற்றார். (இ-10, 5)

ஞாயிற்றுக்கிழமையில் வர்த்தக நிறுவனங்களை மூடுவதற்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ் குடாநாட்டில் உள்ள பிரதான வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க யாழ் வர்த்தகர் சங்கம் ஆலோசித்து வருகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் நகரில் ஞாயிற்றுக் கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு வந்தன. ஹர்த்தால், பதற்றம் காரணமாக அடிக்கடி வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதாலேயே ஞாயிற்றுக் கிழமைகளில் வர்த்தக நிறுவனங்களை மூடும் முறை பின்பு கைவிடப்பட்டது.

எனினும் யாழ் நகரில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் அமைதியை அடுத்து ஞாயிற்றுக் கிழமைகளில் வர்த்தக நிறுவனங்களை மூடி அன்று உடமையாளர்களும் ஊழியர்களுக்கு விடுமுறைவழங்க வேண்டும் என ஆலோசிக்கப்பட்டுத் வருவதாக வர்த்தக செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் உதயனுக்கு தெரிவித்தார். (இ-10)

அரசு-புலிகள் பேச்சுக்கு 4 அம்ச நிபந்தனை

சென்னை, ஜன 4

* சிறையில்உள்ள சுமார் 3,000 தமிழர்களை விடுவிக்கவேண்டும்
* தமிழ் அகதிகள் அனைவரும் பழைய இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும்
* பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும்
* சண்காணிப்பு வலயம் நீக்கப்பட வேண்டும்,

இந்த நான்கு நிபந்தனைகளையும் இலங்கை அரசு பூர்த்தி செய்ய வேண்டும்.

அப்படி நிறைவேற்றினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்தும்.

இப்படி நேற்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் சென்னையில் தெரிவித்தார்.

டாக்டர் பாலசிங்கம் மேலும் சொன்னதாவது;

நான்கு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தாலும் பேச்சுக்கள் இந்திய அரசின் உதவியுடன் தான் நடத்தப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தை எமதுகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராமல் தமிழீழ சுதந்திர பிரகடனத்தை வெளியிடுவதில் பிரயோசனமில்லை.

தமிழ்ப் பகுதிகளுக்கு எரிபொருள், மின்சாரம், உணவு முதலியவற்றை அனுப்பாமல் தடுப்பது தனிநாடுநிலையைதமிழ்ப் பகுதிகளுக்கு வழங்குவதாகவே முடியும்.

தமிழ்ப் பகுதிகளில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்ப் போராளிகளிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டு விட்டனவா? டிக்ஸிற்றை அழைத்து ஹமீத் கேள்வி

கொழும்பு, ஜன. 4

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை இந்தியா தமிழ்ப் போராளிகளுடம் திருப்பிக்கொடுத்துவிட்டதா?

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற்றை வெள்ளி மாலை தனது அலுவலகத்துக்கு அழைத்துப் பேசியபோது மேற்கண்ட கேள்வியை வெளிவிவகார அமைச்சர் ஜனாப், சாஹுல் ஹமீத் எழுப்பினார்

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை இந்திய அரசு தமிழ்ப் போராளிகளிடம் திருப்பிக் கொடுத்துவிட்டது என்ற இந்தியப்பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளைத்தொடர்ந்து திரு டிக்ஸிற். கொழும்பு வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார்.

பத்திரிகைச்செய்திகள் உண்மையா? என்று அமைச்சர் சாஹுல் ஹமீத்திரு. டிக்ஸிற்றைக் கேட்டார்

புதுடில்லியுடன் தொடர்பு கொண்ட போது தெரிவிக்கப்பட்ட தகவலின்படி பத்திரிகைச் செய்திகளில் உண்மை இல்லை என்று அறிந்ததாகதிரு. டிக்ஸிற் அமைச்சரிடம் தெரிவித்

(4-ஆம் பக்கம் பார்க்க)

இந்தியா தனது நிலையை தெரிவிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது ஈரோஸ் பாலகுமார் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன 4

மத்தியஸ்த நிலையை விடுத்து இனப்பிரச்சினையில் தனது திட்டவட்டமான அரசியல் நிலையை எடுத்துச் சொல்ல வேண்டிய நேரம் இந்தியாவுக்கு வந்து விட்டது.

ஈரோஸ் இயக்கத்தலைவர் திரு. வி பாலகுமார் 'சற்றடே ரிவியூ' ஆகில வார சஞ்சிகைகு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மறைமுக, நேரடி' இரகசியப் பேச்சுக்கள், கொள்கை பற்றிய தற்போதைய நிலைபற்றிக் கருத்துக்களையும் திரு. பாலகுமார் பேட்டியில் வெளியிட்டார்.

ஈரோஸ் தனது முந்திய நிலையைத்தான் வலியுறுத்துகிறது. மத்தியஸ்தம் குறித்து சிலவற்றைக் கூறவேண்டியுள்ளது. மஸ்தியஸ்தராக மட்டும் இந்தியா இருக்க முடியாது.

தற்போதைய போக்கான அரசியல் நிலையை மதிப்பிடாத எந்தப்பேச்சுக்களும் பலனளிக்காது

இந்தியா இனப்பிரச்சினையில் திட்டவட்டமான ஒருநிலைப்பாட்டை எடுக்காத வரை பேச்சுக்கள் நீண்டுகொண்டே போகும்.

சரித்திரத்தை நாம் மறக்க முடியாது அப்படி ஒருநிலை எழும் சாத்தியம்

(1-ஆம் பக்கம் பார்க்க)

எம். ஜி ஆருடன் சிதம்பரம் பேச்சு

சென்னை, ஜன, 4

இணை அமைச்சர்ப. சிதம்பரம் கடந்த வியாழன் தமிழக முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரனைச் சந்தித்துப் பேசினார்.

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக இருவரும் பேசிக்கொண்டார்கள் என்று டெல்லி வட்டாரங்கள் தெரிவித்தன

இம்மாதம் 8ஆம் திகதிகளில் இணை அமைச்சர் சிதம்பரம் தமிழ்ப் போராளிக் குழுக்களுடன் அவர்களின் பிரச்சினைகள் குறித்து மட்டுமே பேசஇருக்கிறாராம். (இ-ஐ-ஏ)

கிளிநொச்சியில் மோதல்

யாழ்ப்பாணம் ஜன,4

நேற்றுக் காலை கிளிநொச்சி, கரடிப்போக்கைச் சந்தியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதபடையினருக்கும் இடையே நேரடி மோதல் இடம்பெற்றது

கிளிநொச்சி முகாமில் இருந்துவெளிக்கிடடுவந்த சுமார் 75 இராணுவத் தினரைப் புலிகள் எதிர் கொண்டு தாக்கினர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து ஆயுதபடையினர் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

அதன் பின்னர் ஹெலிக் கொப்டர் தாக்குதல் அந்தப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்டது.

உயிர்ச் சேதம் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (இ-ஏ 10)

ஹெலி சூடு!

வல்வெட்டித்துறை ஜன.4

தொண்டமானாறுப்பகுதியில் இருந்து பருத்தித்துறை நோக்கி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட ஹெலிகொப்டர் ஒன்று நேற்று திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது

கடல் பகுதியிலும் பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் பின்னர் ஹெலிகொப்டர் பறந்து சென்றது

எதுவித சேதமும் ஏற்படவில்லை. (இ-10)

விமான விபத்தில் 59 பேர் பலி!

அபிட்ஜான் ஜன 3

59 பயணிகளுடன் சென்ற பிரேஸில் விமானம் ஒன்று ஐவரிகோஸ்ட்டில் வீழ்ந்துநொருங்கியது,

இந்த விபத்தில் எவரும் உயிர்பிழைத்தமாகத் தெரியவில்லை

ஐவரிகோஸ்டிலிருந்து பிரேஸிலிலுக்கு இந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★

விற்பனைக்கு

சிறிதளவே பயன்படுத்தப்பட்ட Sansui tuner AMP, Cassette Deck, Record Player. Speakers ஆகியனவும் Westpoint 6 . 9 cft Deep Freezer ம் விற்பனைக்குள்ளன. விளம்பரதாரர் M66, dyn ads, 476, பிரதான வீதி, கண்டுக்குளி (சென்ற் ஜோஸ் கல்லூரி முன்பாக).

யாழ்ப்பாணம் வை. எம். சி ஏ. இன் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிதிக்காக 3-1-87 தொடக்கம் 3-2-87 வரை புத்தக விற்பனை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடாத்தப்படும்.

A/L இலிருந்து நேசரி வகுப்பு வரைக்கும் தேவையான பாடப்புத்தகங்கள், கொப்பி வகைகள் மற்றும் உபகரணங்களும், நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தேவை

இயந்திரஇயக்குநர்கள் தேவை ஹைடில்பேர்க் (HEIDELBERG) அச்சு இயந்திரத்தில் கடமையாற்றிய அனுபவமுள்ளவராக இருக்க வேண்டும் விளம்பர எண்: 43
மே/பா உதயன்.
யாழ்ப்பாணம்.

சட்ட விரோத மின்சாரம்: கிராமிய நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும்

கரவெட்டி, ஜன. 4
சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபடும் அனைவருக்கும் எதிராக கிராமிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும்.

நெல்லியடி பிரசைகள் குழு இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமீபத்தில் துன்னாலைப் பகுதியிலும் மற்றும் இடங்களிலும் நெல்லியடி பிரசைகளின் குழுவும் இலங்கை மின்சார சபையும் இணைந்து சட்ட விரோத மின்பாவனை ஒழிப்பில் ஈடுபட்டன

அரச ஊழியர்களும், வசதி படைத்தவர்களும் கூட சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டிருந்தது இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டது.

சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபடுவோருக்கு எதிராக கிராமிய நீதிமன்றத்தில் வழக்கை தொடர்ந்து, தண்டனையும் வழங்கப்படும் என இவர்கள் இப்போது எச்சரிக்கப்பட்டனர்.

இதேவேளை சட்ட விரோத மின்பாவனையில் எவரையும் ஈடுபட்ட வேண்டாம் என்றும் இதனால் வீண் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன என்றும் — ஆகவே சட்ட விரோத மின்பாவனை நிறுத்தப்பட வேண்டும் என்று நெல்லியடி பிரசைகள்குழு அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளது.

(இ–70)

உயரமான மரங்களில் கிருமிநாசினி தெளிக்க இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஜன 4
உயரமான மரங்களிலுள்ள பூ, பிஞ்சுகளுக்கு கிருமி நாசினி தெளிப்பதற்காக இரு இயந்திரங்களை வாங்குவதற்கு யாழ் விவசாயத்திணைக்களத்திற்கு 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை ஒதுக்கீட்டிலிருந்து இந்நிதியை அரச அதிபர் ஒதுக்கியுள்ளார்.

விவசாயிகள் இந்த இரு கிருமிநாசினிதெளிக்கும் இயந்திரங்களையும் திணைக்களத்திடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுக்கப்படும்.

யாழ் அபிவிருத்திச் சபை பிரதம கணக்காளர் திரு. கே. எம். ராஜேந்திரன் இதனைத் தெரிவித்தார். (இ–5)

அறவழிப் போராட்டக் குழுவின் விழா

சாவகச்சேரி, ஜன. 4
அறவழிப் போராட்டக் குழுவினரின் கிறிஸ்தோதய விழாவும் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சியும் குழுவின் பணிமனையில் சிறப்புற இடம் பெற்றன.

அ போ. கு. தலைவர் திரு வி. எஸ் துரைராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் பே. பிலிப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் தலைவர் திரு. க. நடராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தனர். (இ–31

பாதிக்கப்பட்டோருக்கு சேவாச்சிரமம் உதவி

பருத்தித்துறை ஜன. 4
யாழ் மாவட்டத்தில் இராணுவ கெடுபிடிகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது.

இந் நிவாரண உதவிகள் ஒவ்வொரு போயா தினமும் நடைபெறும் ஆராதனைகளின் பின்பு வழங்கப்படுகின்றன.

இராணுவக் கெடுபிடிகளினால் குடும்பத் தலைவர்கள் இறந்தால் அவ்வாறான குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகள் இருந்தால் அவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கேற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தத்தம்பகுதி கிராமசேவகரின் பரிந்துரையுடன் ஆச்சிரமத்திற்கு வந்து தொடர்பு கொள்ளலாம் என ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (இ–118)

மக்கள் முகம்

புதிய சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், ஜன. 4
புதிய சனசமூக நிலையம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் வருமாறு: தலைவர் மா. குணசிங்கம் உபதலைவர் ச. இலட்சுமணன், செயலாளர் இ யோகராஜா, உபசெயலாளர் பொ. சீதாராஜன், பொருளாளர் க. நாகலிங்கம்

7 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது. (இ–எ)

கால்நடை வளர்ப்போர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 4
சங்கானை கால்நடை வளர்ப்போர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.

சங்கானை மிருக வைத்திய அலுவலகத்தில் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி. ச. செல்லத்துரை தலைமையில் இக்கூட்டம் நடந்தது

புதிய நிருவாகிகள் வருமாறு:

தலைவர் சு. தர்மசீலன், உபதலைவர் நா. சற்குணசிங்கம், செயலாளர் மிருக வைத்திய அதிகாரி, பொருளாளர் செ. மாணிக்கவாசகர், செயற்குழு; திருவாளர் அரசகுலசிங்கம், நிவிய சிங்கம், செ. அமிர்தலிங்கம், சிவப்பிரகாசம், திருமதி. சுவாமிநாதன், செல்வராசா, ரி. [illegible] நேஸ்வரன்.

(இ–எ)

செய்திக்கொத்து

கிளினிக் தினங்கள் குறைப்பு

அச்சுவேலி, ஜன. 4
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் வாரந்தோறும் இரண்டு தினங்கள் நடைபெற்று வந்த குழந்தைகள், தாய்மார் கிளினிக்குகள் இம் மாதத்திலிருந்து மாதத்திற்கு நான்கு தினங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் பிரசவத் தாய்மாருக்கான கிளினிக்கும் புதன்கிழமைகளில் குழந்தைகளுக்கான கிளினிக்கும் நடைபெற்று வந்தன.

ஜனவரி மாதத்தில் இருந்து இந்த நடைமுறை மாற்றப்பட்டு மாதத்தில் இரண்டு செவ்வாய்க்கிழமைகளில் தாய்மாருக்கான கிளினிக்கும் இரண்டு செவ்வாய்க்கிழமைகளில் குழந்தைகளுக்கான கிளினிக்கும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ–11)

ஹாட்லி முதலிடம்

பருத்தித்துறை, ஜன. 4
யாழ் மாவட்ட உயர்தரக் கல்லூரிகளுக்கிடையேயான விஞ்ஞான விளுப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரி முதலிடம் பெற்றது.

இதனை இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி மண்டபத்தில் நடத்தியது.

போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்குரிய பரிசில்களையும் சான்றிதழ்களையும் பாடசாலைக்குரிய சூழல் கேடயத்தையும் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனா வழங்கினார். (இ–118)

நியமனம்

வேலணை, ஜன. 4
வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக செல்வி எம். ஜெலமேபல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ. ரகுநாதன் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பதில் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ–167)

தண்ணீர்த் தாங்கி

பண்டத்தரிப்பு, ஜன. 4
இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் கார்த்திகேசனின் ஞாபகார்த்தமாக தண்ணீர்த் தாங்கி ஒன்று கட்டப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கே இந்த ஞாபகார்த்த அன்பளிப்பு செய்யப்பட்டது

(இ–120)

ப. நோ. கூ. ச கடன் திட்டம்

அச்சுவேலி, ஜன. 4
வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊழியர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

உற்பத்திக்கடன், நுகர்ச்சித்தேவை, கட்டடம் அமைத்தல், கடன்தீர்த்தல், மின் இணைப்புப் பெறல், அவசர தேவை ஆகிய காரணங்களின் நிமித்தம் இக்கடனுக்கு விண்ணப்பிக்கலாம். (இ–11)

இருள் சீசன்

தாளையடி, ஜன. 4
இருள் பிடிக்கும்'சீசன்' தற்போது வடமராட்சிக் கரையோரப் பகுதியில் ஆரம்பமாகி உள்ளது

ஏற்றுமதிப் பாவிப்புக்கான ஒரு கிலோகிராம் இருளை இப்பகுதி மீனவர்கள் 100ரூபா ஆக விற்பனை செய்யக்கூடியதாக உள்ளது.

கொழும்பு புக்கான லொறிப் போக்குவரத்து தடைகள் எதுவுமின்றி நடத்தப்படுமேயானால் இருளின் விலை மேலும் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ–144)

மின்சார விஸ்தரிப்புக்கு கோரிக்கை

தாளையடி, ஜன. 4
பருத்தித்துறை கிழக்குப் பகுதிக்கு மின்சார வசதியை விஸ்தரிக்கும்படி அப்பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள் மற்றும் வியாபாரங்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரைக் கோரியுள்ளன.

பருத்தித்துறைத் தொகுதியில் மணற்காடு தொடக்கம் முள்ளியான் வரையுமுள்ள கிராமங்களே இதுவரை மின்சாரவசதி பெறாத நிலையில் உள்ளன. (இ–144)

மருந்துக் கலவையாளர் சம்பள உயர்வு இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 4
பத்து வருடங்களுக்கு மேலாக மருந்துக்கலவையாளரின் சம்பளத்தில் எவ்வித உயர்வும் இல்லை. பல மருந்துக்கலவையாளர் பரீட்சையில் சித்தியடைந்தும் தற்போதைய அரசின் சம்பள உயர்வு கூடப் பெறவில்லை.

அரச மருந்துக் கலவையாளர் சங்க உபதலைவர் திரு. எஸ். சற்குணம் இப்படிக் கூறினார்.

அரச மருந்துக் கலவையாளர் சங்க விசேஷ நிர்வாக சபைக் கூட்டத்தில் பேசுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், யாழ். வவுனியா சுகாதாரப் பணிப்பாளர் பிரிவில் கடந்த 5 வருடங்களாக மருந்துக் கலவையாளர் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவில்லை.

இவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்பிரச்சினைகளை சுகாதாரப் பணிப்பாளருடன் நேரடியாகப் பேசித் தீர்க்கத்தக்கதாக இயைச் சங்கத்தைப் பயப்படுத்த வேண்டும் என்றார். (இ–5)

மறியல் போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 4
கல்லுடைக்கும் தொழிற்சாலைகளை அப்புறப்படுத்துமாறு கோப்பாய் தெற்கு குடியிருப்பாளர்கள் நடத்திய மறியற் போராட்டம் கைவிடப்பட்டது.

இது சம்பந்தமாக தேவையான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தமிழ் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அளித்த உறுதி மொழியைத் தொடர்ந்து, மறியற் போராட்டச் செயற்குழுவினர் போராட்டத்தை நிறுத்த சம்மதித்தனர்.

மறியல் போராட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கும் பிரச்சினையைத் தீர்க்கப் பொறுப்பேற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் செயற்குழுத் தலைவர் திரு. வி. சோமசுந்தரம் நன்றி தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் அமெரிக்க பல்கலைக்கழக வளாகம் பணிப்பாளராக தமிழர்

வேலணை, ஜன. 4
ஆசிய நாடுகளில் முதல் தடவையாக அமெரிக்க டொன்ஸ்பைஸ் பல்கலைக்கழகம் இலங்கையிலே வெளிவாரிப் பட்டப் படிப்பு வளாகம் ஒன்றை அமைக்கவுள்ளது.

இவ் வளாகத்தில் பி.எஸ் சி எம்.எஸ் சி கலாநிதி ஆகிய துறைகளில் பட்டங்கள் வழங்கப்படும்

இவற்றில் முக்கிய மானவை உணவு போசாக்கு முறை, அக்குபங்சர், சமூகநல விஞ்ஞானம் ஆகும்.

இத்துறைகளில் கொம்பியூட்டர் அடிப்படையில் வியாதிகளை கண்டு பிடித்து சிகிச்சை அளிக்கும் போதனை வழங்கப்படும்.

காலப்போக்கில் இலங்கையின் பல பாகங்களிலும் வளாகங்கள் அமைக்கப்படும்.

இதன் பணிப்பாளராக வேலணையைச் சேர்ந்த கலாநிதி நகுலேசபிள்ளை கதிர்காமநாதன் கடமையாற்றுவார். (இ–167)

விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
யாழ் நகரில் O/L வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம்
10 வது வருடசேவை
O/L, Day Classes
காலை 8.30
9, 8, 7, 6 வகுப்புக்களும் ஆரம்பமாகின்றது. மாலை 2.30
ஆரம்பம்: ஜனவரி 5

விக்னா டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
கலை, வர்த்தக மீடியல் வகுப்புக்கள்
DAY CLASSES
புதிய பிரிவு 2
ஆரம்பம்: ஜனவரி 5
காலை 8-00 மணி

பிரயாண ஒழுங்குகள்
நோர்வே ★ கனடா
ஜேர்மனி ★ லண்டன்
சிங்கப்பூர் ★ சவூதிஅரேபியா
ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் பிரயாணம் மேற்கொள்வதற்கு நாடுங்கள்.
TRI STAR TRAVELS
No 6, Model Market, Jaffna. Telephone: 23831

ஓய்வூதியம் பற்றி ஓர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 4
1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குரிய வழமையான ஓய்வூதியப் பட்டியலில் இடம் பெறுதோரின் ஓய்வூதியப் பட்டியல் மக்கள் வங்கிகள் தவிர்ந்த மற்றைய வங்கிகளுக்கு உரிய ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்களுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கச்சேரி ஓய்வூதியக்கிளை அறிவித்துள்ளது.

தபாலகங்களில் ஓய்வூதியம் பெற்றவர்கள் பலர் கிராமிய, வங்கிகளுக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் தமது ஓய்வூதியத்தை மாற்றும்படி விண்ணப்பித்திருந்தனர்.

இத்தகைய ஓய்வூதியம் பெறுவோர் தங்கள் வங்கிக்குச் சென்று உரிய ஓய்வூதியம் பற்றுச் சீட்டைப் பெற்று தங்கள் டிசம்பர் மாத ஓய்வூதியத்தைவிரைவில் பெறும்படி ஓய்வூதியக்கிளை கேட்டுக் கொண்டுள்ளது. (இ–5)

வவுனியா அரச அதிபர் செட்டிகுளம் மக்கள் பிரச்சினைகளை கேட்டு அறிந்தார்

யாழ்ப்பாணம், ஜன. 4
வவுனியா அரச அதிபர் திரு. கே சி லோகேஸ்வரன் அண்மையில் செட்டிகுளம் விஜயம் செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

செட்டிகுளம் உதவி அரச அதிபர் பணிமனையில் அரச அதிகாரிகளின் கூட்டம் ஒன்றிலும் அரச அதிபர் கலந்து கொண்டார்.

பின்னர் செட்டிகுளம் விவசாய சேவை நிலையத்தில் தலைவர் திரு. [illegible] தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட அரச அதிபர் விவசாயிகளின் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இது சம்பந்தமாக மகஜர்களும் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

கூட்டெரு தயாரிக்கும் முறைபற்றி செயல் முறைமூலம் விவசாயிகளுக்குக் கூட்டத்தில் விளக்கமளிக்கப் பட்டது.

விவசாயப் போதனாசிரியர் திரு. ஏ. எஸ். எம். [illegible] செயல் முறை விளக்கம் [illegible] (இ–எ)

வெளிநாடு செல்லும் பிரயாணிகளின் முக்கிய கவனத்திற்கு
உங்கள் பிரயாணம் எங்களால் நிச்சயிக்கப் படுகின்றதா என்பதை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.
✷ கனடா ✷ பிரான்ஸ்
✷ ஜெர்மனி ✷ நோர்வே
ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாணம் எமது காரியாலயத்தில் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றது.
தவிப்பட்ட நபரோ அன்றி வேறு நிறுவன முகவர்களோ எம்மால் நியமிக்கப்படவில்லை.
நீங்கள் எம்முடன் நேரிலேயே தொடர்புகொள்ளுங்கள்.
உங்கள் வெளிநாட்டுப் பயணத்தை நிறைவேற்றக் காத்திருக்கிறோம்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.
நோர்வே செல்பவர்களுக்கு இலவச பொனிட் செய்து தரப்படும்.
எமக்கு வேறு கிளைகள் கிடையாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமை எல்லாம் புல்லின் பூவைப் போலவும் இருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது.
— பைபிள்

உதயன்

இலங்கை - அரசியல் - ஆன்மீகம்

இல.15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 04-01-1987 த.பெ இல 23

அரசுக்குச் சவாலும்! அரசின் சவாலும்!!

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்களின் விநியோகத்தை அரசாங்கம் தற்காலிகமாக நிறுத்தி உள்ளது.

இலங்கை நாட்டில் எரிபொருள் பாவனைக்கு வந்தபின்னர் இப்படி ஒரு அக்கிரம நடவடிக்கை எடுக்கப்பட்டதில்லை. அரசாங்கம் நாட்டின் ஒருபகுதி மக்கள்மீது பொருளாதாரத் தடை விதிப்பது — பொருளாதார அடக்குமுறை செய்வது இதுவே முதற் தடவையாகும்.

எரிபொருள்கள் இன்றைய மனிதனின் மிகமிக முக்கியமான அத்தியாவசியப் பொருள்களில் ஒன்று. அது இல்லையேல் வாழ்க்கையே ஸ்தம்பிக்கும் பேராபத்து உண்டு.

எரிபொருள் இல்லையேல் போக்குவரத்து இல்லை; வர்த்தகம் இல்லை; உணவு உற்பத்தி இல்லை; மக்கள் பட்டினி கிடந்து இறக்கும் அவல நிலைதான் ஏற்படும்.

இது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மட்டுமல்ல, உலகில் எந்தப் பகுதிக்குமே பொருந்தும். ஏனெனில், எரிபொருள் அந்தளவு முக்கிய இடத்தை மனித வாழ்வில் ஆக்கிரமித்து விட்டது.

இது இலங்கை அரசாங்கத்துக்கும், அதன் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும் தெரியாத விஷயமல்ல. அவ்வாறிருக்க யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மட்டும் எரிபொருள் விநியோகத்தை அவர்கள் தடை செய்திருப்பதன் நோக்கம் என்ன?

எரிபொருள் தடை, பொருளாதாரத் தடைக்கு ஒப்பானது. நிர்ப்பந்த நிலையை ஏற்படுத்தித்தாம் நினைத்ததைச் சாதிக்கவும், சம்பந்தப்பட்டவர்களைப்பாதிக்கவுமேபொருளாதாரத் தடை கொண்டு வரப்படுவது உண்டு.

பொருளாதாரத் தடை என்பது, ஒரு நாடு மற்றநாட்டின்மீது — எதிரி நாட்டின் மீது — அக்கிரமம் செய்யும் நாட்டின் வழிக்குக் கொண்டுவருவதற்கு விதிக்கும் நடைமுறையாகும்.

ஒருநாட்டின் எந்தப் பகுதியில் எவ்வித போராட்டம் நடந்தாலும் போராட்டக்காரர்களைத் தண்டித்தாலும்கூட, மக்களைத் தண்டிப்பது வழக்கமல்ல. அவர்களுக்கு உரிய வசதிகளைக் குறைவிலாதிச் செய்துகொடுக்கவே அரசு முயற்சிக்கும்.

ஆனால் இலங்கை அரசாங்கம், மக்களைத் தானே கஷ்டத்தில் ஆழ்த்தி, அவர்களைச் சாகடிக்கும் முயற்சியில் இறங்கி உள்ளது. தமிழர்களை ஆயுதப் படைகளைக் கொண்டு கொன்று குவிக்கும் அரசுக்கு இது ஒரு சிறிய விவகாரமாகவே இருக்கும் அல்லவா?

ஆயுத பலத்தால் போராளிகளை வெல்ல முடியாத அரசு, இப்போது பொருளாதாரத் தடைமூலம் தமிழ் மக்களைப் பணிய வைத்து அதன் வாயிலாக போராளிகளைச் சரணடையச் செய்யும் தந்திரம் என்றும் இதனைக் கொள்ளலாம்.

குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தைப் போராளிகள் நடத்துவார்கள் என்பது அரசுக்குஒரு சவால். அதற்குப் பதில்தமிழர்களுக்கு அரசு விடுத்திருக்கும் சவாலே இந்தப் பொருளாதாரத் தடை.

தமிழ் மக்களை இன ஒழிப்புச் செய்து வருகிறது என்பதை மறுத்து வந்த இலங்கை அரசு, அதனை வெளிப்படையாக, துலாம்பரமாக செய்து காட்டத் தொடங்கி உள்ளது. இது உலக நாடுகள் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

யாழ். குடாநாட்டு மக்கள்மீது பொருளாதாரத் தடை விதிப்பதன் மூலம் அவர்கள் வேறுநாட்டு மக்கள் என்பதனை அரசு அங்கீகரித்திருக்கிறது என்றும் கொள்ள வேண்டும். அந்த நிலையை மேலும் உறுதி செய்து கொள்வது நல்லது என்று இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறுகிறோம்.

1977 இல் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை ஒப்புக்கொள்ள மறுத்த அரசு— தானே குடாநாட்டில் தனிநாடு ஒன்றை அங்கீகரித்த நிலையில், அதனை உறுதி செய்து கொள்ள தமிழருக்கான சுயநிர்ணய வாக்கெடுப்பு ஒன்றை உடனடியாக நடத்தட்டும்.

அப்போது தமிழ் மக்களின் நிலைப்பாடு தெரிந்து விடும். இது அரசாங்கத்துக்கு எமது சவால்!

அடக்கு முறைக்கும், அக்கிரமத்துக்கும் எதிராக உரிமைப் போராட்டம் நடந்தத் தொடங்கியவர்கள் தமிழ் மக்கள். ஆயிர்ப் போராட்டமாகவும் அரசாங்கமே மாற்றிவிட்டது.

வாழ்வதானால் உரிமையுடன் வாழ வேண்டும் இல்லையேல் சாவதே மேல் என்ற நிலைக்கு அவர்கள் வந்து விட்டார்கள்.

எனவே பொருளாதாரத் தடை போன்றவை மக்கள் எதிர்பார்த்ததே. ஆயுதத்தால் சாவதற்குப் பதில் பட்டினியால் சாக வேண்டி வரும். அவ்வளவுதான் வித்தியாசம்.

இந்தச் சில்லறைப் பயமுறுத்தல்களுக்கு அஞ்சி சிங்கள அரசின் காலடியில் விழ தமிழன் ஆயத்தமில்லை. அதனை அரசு உணர்ந்து கொண்டால் சரி.

போராளிகளைத் தண்டிப்பதாகக் கூறி, மக்களைப் பழிவாங்கும் பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்து தமிழர்களை அடிபணிய வைக்க முடியாது என்பதை அரசு உணரட்டும்.

எரிபொருள் இல்லாத காலத்திலும் மனிதன் வாழ்ந்திருக்கிறான். அந்த நிலைக்கு மீண்டும் போவதானாலும் உரிமைகளை, சுதந்திரத்தை விலை பேச தமிழன் ஒருப்படமாட்டான் என்பதை அரசு உணர்ந்தால் சரி.

ஞாயிறு விவரணச் சிறப்பம்சம்

வாகனச் சாரதிகளுக்கு வேகத்தின் மீது மோகம் ஏன்?

பிரதான வீதிக்கு அருகேயிருந்த அந்த பாலர் வகுப்புப் பள்ளி விட்டதும், புத்தகங்களை அள்ளி அணைத்தபடி துள்ளி வருகிறார்கள் சீருடைச் சிறார்கள்.

அதில் ஒரு பாலாடை நிற பாவாடைச் சிறுமியின் கண்களுக்கு வீதியின் மறுபக்கத்தில் நிற்கும் தந்தையின் முகம் தெரிகிறது; கண்கள் விரிகிறது.

மகளை வீட்டுக்குக் கூட்டிச் செல்ல சைக்கிளுடன் தயாராக தந்தை காத்து நிற்கிறார். மகளை பார்த்து நிற்கிறார்.

ரீச்சரிடம் தனது பெயரை சரியாக எழுதி, வாங்கிய சரியை அருமை தந்தையிடம் காட்டி பெருமைப்படத் துடிக்கிறது சிறுமியின் மனம்.

எரிபொருள் விநியோகம் இடை நிறுத்தப்படுமுன்னர் இக்கட்டுரை எழுதப்பட்டது.

வீதியின் இருபக்கத்தையும் தனது செல்ல வாக்குக் கண்களால் நோக்குகிறாள்.

தூரத்தே வரும் சிறு வானைக் காண்கிறாள். அது அருகே இப்போது வராது என்ற நம்பிக்கையில்; வீதியைக் கடக்க எண்ணி நடக்கத் தொடங்குகிறாள்.

ஆனால் அதி கதியுடன் வந்த அந்த வானைக் கண்டு கதி கலங்கி மதி மயங்கி பாதி வீதியிலே பீதியுடன் நிற்கிறாள்.

வாகனத்தை உடன் கட்டுப்படுத்த முடியாதளவு வேகம். விபத்தை தவிர்க்க தவித்துப் போகிறான் சாரதி.

சிறுமியை ஒரு பக்கமும் புத்தகங்களை மறுபக்கமுமாக தூக்கி எறிகிறது வான்.

சிறுமியின் மண்டை பிரிந்த நிலையில்— வேலியடியில் சிறுமி;

சிறுமியின் கொப்பி விரிந்த நிலையில்— தந்தையின் காலடியில்;

—அதில்

அவளது பெயர் சரியாக எழுதப்பட்டு அதற்கு நேரே ரீச்சரின் சரி. அதைப்பார்த்த தந்தைக்கு சித்திர புத்திரனின் கணக்குக் கொப்பியில் மகளின் பெயரின் எதிரே சரி போட்டது போல் தெரிகிறது.

எமனின் எருமை வாகனம் போல் வந்த அந்த வாகனம், சிறுமியைத் தூக்கி எறிந்து விட்டு தூரத்தே சென்று நிற்கிறது.

தந்தை இயங்க முடியாது மயங்கி விழுகிறார்.

மகளைச் சைக்கிளில் ஏற்றிச் செல்ல வந்த தந்தையையும் மகளையும் ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் செல்கிறது அந்த வாகனம்.

இவ்விபத்து கே. கே. எஸ் வீதியில் சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் நடந்தது.

கொடிகாமத்தில்

சென்ற ஆண்டு இறுதியிலும் ஒன்று நடந்தது... அது கொடிகாமத்தில்...

மினிபஸ் ஒன்று கடும் மழையையும் பொருட்படுத்தாமல் கடும் வேகத்துடன் செல்கிறது.

வேகத்தை திருப்பங்களில்கூட குறைக்க விருப்பமில்லாதவாறு சாரதி அக்ஸிலேட்டரை மிதிக்கின்றார்.

கிடுகிடு பள்ளங்களிலும் கடுகதி வேகம் காட்டுகிறது வேகமானி.

மழைநேரத்து வீதி ஓரத்து சகதியைக் கண்ட சைக்கிள்காரர்கள் வீதியோர வேலிகளில் கறையான் தட்டுகிறார்கள்.

வயது போனவர்கள் வெளியே வருவதற்கும், தாய்மார்கள் பிள்ளைகளைத் தனியே வெளியே அனுப்பவும் தயங்குகிறார்கள்.

வேகம் கூடும்போது விவேகம் குறைந்து விடுகிறது.

திருப்பங்கள், சந்திகள். போக்குவரத்து நெரிசல் உள்ள சனசந்தடியான வீதிகளில் கூட சாரதிகள் வேகக் கட்டுப்பாட்டைக் கவனிப்பதில்லை.

பலர் வாகனங்களைத் திருப்பங்களில் எந்தவித சைகையும் காட்டாது திடீரெனத் திருப்பியும், வேகமாகச் சென்று திடீரென நிறுத்தியும் பின்னால் வரும் வாகனங்களின் பிரேக்கைச் சோதிப்பர்.

இன்னும் சில சாரதிகள் நடுவீதியில் வாகனத்தை நிறுத்தி தமது வீட்டுக் கதவுகளைக் கதைத்து பின்னால் வரும் வாகனங்களின் பொறுமையைச் சோதிப்பர்.

ஹோர்ன்

எந்த ஒரு சாரதியும் இன்று பின்னால் வரும் வாகனத்திற்குச் சைகை காட்டுவதோ, முன்னால் செல்லும் வாகனத்தின் சைகைகளைக் கவனிப்பதோ இல்லை.

சில சாரதிகள் பைத்தியகாரர்கள்போல் வைத்தியசாலைகளுக்கருகே, காட்டுப் பாதைகளில் அடிக்கும் ஹோர்னை அடிக்கிறார்கள்.

இது எவ்வளவு தூரம் நோயாளிகளைப் பாதிக்கும் என்று அந்த மன நோயாளிகள் உணருவதில்லை.

இன்று ஒருவழிப்பாதைகள் இருவழிப் பாதைகளாகிவிட்டன. வயோதிபர்கள், பள்ளிச்சிறுவர்கள் வீதிகளைக் கடப்பதென்பதோ முடியாத காரியமாகிவிட்டது.

எந்த ஒரு சாரதியும் இவர்களுக்காக வாகனத்தை நிறுத்தி உதவுவதென்பதோ, பள்ளிச் சிறுவர்கள் கும்பலாக வரும்போது மெதுவாக ஓட்டுவதென்பதோ இல்லை.

சில வீதிகளில் இதற்காக வேகத்தைத் தடைப்படுத்த வீதிகளில் மண்மேடுகளும், வாய்க்கால்களும் வெட்டி வைத்துள்ளனர்.

இதனால் வாகன உதிரிப்பாகங்கள் பழுதடைவதுதான் கண்டபலன்.

சாரதிகள் மட்டுமன்றி பாதசாரிகளும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கண்களை மூடிக்கொண்டு வீதியைக் கடப்பதும், கும்பலாக வீதியில் செல்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

போக்குவரத்து விதிகள் கடைப்பிடிக்கப் படாததால் மக்கள் உயிருக்கு ஆபத்து

பன்றிக்குட்டிபோல், சறுக்கியபடி வீதியோரத்து சகதியில் புரண்டு எழும்புகிறது மினிபஸ்.

'வான் தடம் புரண்டது தலை துண்டாகிப் பிரயாணி மரணம்' இவ்வாறிருந்தது மறுநாள் பத்திரிகைச் செய்தி.

தினசரிகள்; தினசரி இப்படியான விபத்துச் செய்திகளைத் தாங்கி வருவது, பொதுஜனத்துக்கு விசனத்துக்குரியவை,

விபத்து என்றால் தற்செயலாக, தவறுதலாக நடப்பவையே.

ஆனால் இன்று நடக்கும் விபத்துக்களைப் பார்க்கும் போது அவை, வாகனச் சாரதிகளின், பாதசாரிகளின் பொறுப்புணர்ச்சியற்ற அசட்டைத் தனத்தால் நடைபெறுவதாகத் தெரிகிறது.

வீடுகளுக்குள் ஓடும் வாகனங்கள்

வீதியில் ஓட வேண்டிய வாகனங்கள் வீதியோர வீடுகளுக்குள் ஓடுகின்றன.

பாதசாரிகளை தன்னுள் ஏற்றி பிரயாணி ஆக்க வேண்டிய பஸ்கள் அவர்கள் மேல் ஏறி புரியாணியாக்குகின்றன.

வாகனங்களின் வேகத்திற்கு ஈடுகட்ட முடியாத சைக்கிள்காரர்கள் வீதியோர வேலிகளில் கறையான் தட்டுகிறார்கள்.

வயது போனவர்கள் வெளியே வருவதற்கும், தாய்மார்கள் பிள்ளைகளைத் தனியே வெளியே அனுப்பவும் தயங்குகிறார்கள்.

வேகம் கூடும்போது விவேகம் குறைந்து விடுகிறது.

திருப்பங்கள், சந்திகள். போக்குவரத்து நெரிசல் உள்ள சனசந்தடியான வீதிகளில் கூட சாரதிகள் வேகக் கட்டுப்பாட்டைக் கவனிப்பதில்லை.

பலர் வாகனங்களைத் திருப்பங்களில் எந்தவித சைகையும் காட்டாது திடீரெனத் திருப்பியும், வேகமாகச் சென்று திடீரென நிறுத்தியும் பின்னால் வரும் வாகனங்களின் பிரேக்கைச் சோதிப்பர்.

இன்னும் சில சாரதிகள் நடுவீதியில் வாகனத்தை நிறுத்தி தமது வீட்டுக் கதவுகளைக் கதைத்து பின்னால் வரும் வாகனங்களின் பொறுமையைச் சோதிப்பர்.

ஹோர்ன்

எந்த ஒரு சாரதியும் இன்று பின்னால் வரும் வாகனத்திற்குச் சைகை காட்டுவதோ, முன்னால் செல்லும் வாகனத்தின் சைகைகளைக் கவனிப்பதோ இல்லை.

சில சாரதிகள் பைத்தியகாரர்கள்போல் வைத்தியசாலைகளுக்கருகே, காட்டுப் பாதைகளில் அடிக்கும் ஹோர்னை அடிக்கிறார்கள்.

இது எவ்வளவு தூரம் நோயாளிகளைப் பாதிக்கும் என்று அந்த மன நோயாளிகள் உணருவதில்லை.

இன்று ஒருவழிப்பாதைகள் இருவழிப் பாதைகளாகிவிட்டன. வயோதிபர்கள், பள்ளிச்சிறுவர்கள் வீதிகளைக் கடப்பதென்பதோ முடியாத காரியமாகிவிட்டது.

எந்த ஒரு சாரதியும் இவர்களுக்காக வாகனத்தை நிறுத்தி உதவுவதென்பதோ, பள்ளிச் சிறுவர்கள் கும்பலாக வரும்போது மெதுவாக ஓட்டுவதென்பதோ இல்லை.

சில வீதிகளில் இதற்காக வேகத்தைத் தடைப்படுத்த வீதிகளில் மண்மேடுகளும், வாய்க்கால்களும் வெட்டி வைத்துள்ளனர்.

இதனால் வாகன உதிரிப்பாகங்கள் பழுதடைவதுதான் கண்டபலன்.

சாரதிகள் மட்டுமன்றி பாதசாரிகளும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கண்களை மூடிக்கொண்டு வீதியைக் கடப்பதும், கும்பலாக வீதியில் செல்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

பொறுப்பற்ற செயல்கள்

ஒருவருக் கொருவர் சமாந்தரமாகச் செல்லும் சைக்கிள்காரர்களும், வாகனங்களுக்கிடையே புகுந்து சாகஸம் செய்யும் சைக்கிள்காரர்களுமே பெரும்பாலான விபத்துகளுக்கு காலாகின்றனர்.

ஆடு மாடு போன்ற மிருகங்களை பாதையோரங்களில் மேயக்கட்டுவதும் சந்திகள், திருப்பங்களில் வாகனங்களை நிறுத்தி வைத்திருப்பதும் பொறுப்பற்ற செயல்களாகும்.

இவை போக்குவரத்தைத் தடை செய்வதுடன் விபத்துகளையும் உருவாக்குகின்றன.

சகலரும் போக்குவரத்து விதிகளை அறிந்து கொண்டு, அவற்றை ஒழுகி வந்தால் எவ்வளவோ உயிராபத்துகளை நாம் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆறறிவுள்ள மனிதனுக்கு தடி வைத்துள்ள ஒரு கண்காணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ்த்தான் கட்டுப்பாடும் ஒழுக்கமும் வருமென்றால் அது கவலைக்குரிய விடயமே.

போக்குவரத்துச் சீர்கேடுகளும் ஒழுங்கற்ற தன்மைகளும் நீக்கப்பட வேண்டும்.

அப்படி நீக்கப்பட்டால் மட்டுமே யாழ் நகரிலும் மற்றும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் பொதுமக்கள் நிம்மதியாக வீதிகளில் செல்ல முடியும்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் போக்குவரத்துச் சேவை படிப்படியாகக் கொண்டு வரப்படுவதால் வடபகுதியில் நிகழும் போக்குவரத்துச் சீர்கேடுகள் நிவர்த்தி செய்யப்படும் என்று பொதுமக்கள் நம்புகிறார்கள். ✶

எஸ். யே. பி. ரட்ணதுரை

கொழுப்புச் சத்தும் புற்றுநோயும்

பொஸ்டன், ஜன. 3

குறைந்த கொழுப்புச் சத்து நிறைந்த உணவை உண்ணுவதால் பெண்களுக்கு மார்புப் புற்று நோய் வராமல் தடுத்துக் கொள்ளலாம் என்பது தவறு.

இவ்வாறு லண்டன் வைத்திய சஞ்சிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

4 ஆண்டு கால ஆராய்ச்சியின் பின்னர் இது கண்டுபிடிக்கப்பட்டதாக மசாசூசெட்ஸ் ஸைச் சேர்ந்த வைத்திய நிபுணர் டாக்டர் வால்டர் வில்லெட் இச் சஞ்சிகையில் எழுதியிருக்கிறார்.

உணவுக்கும் மார்புப் புற்றுநோய்க்கும் எந்த வித தொடர்புமே கிடையாது என்றும் அவர் எழுதியிருக்கிறார். (இ-எ)

ரேகனின் புத்தாண்டு உரையைக் குழப்பிய சோவியத் அதிகாரிகள்

கலிபோர்னியா, ஜன.3

சோவியத் மக்களுக்கு அமெரிக்க அதிபர்ரேகன் விடுத்த புத்தாண்டு வானொலி உரையை சோவியத் அதிகாரிகள் குழப்பியடித்தனர்.

இதனால் சோவியத் மக்களினால் அதிபர் ரேகனின் உரையைக் கேட்க முடியாது போயிற்று.

சிந்தனைகளின் பரிமாற்றமே முக்கியமான மனித உரிமை. அதற்கு எவ்வளவு மதிப்பை சோவியத் கொடுக்கின்றது— என்பது இதில் இருந்து புலனாகின்றது. இப்படி வெள்ளைமாளிகை கூறியது. (இ-எ)

வெள்ளையருக்கு தேர்தல்

கேப்டவுன், ஜன. 3

தென் ஆபிரிக்காவில் வாழும் வெள்ள இனச் சிறுபான்மையினருக்கான பொதுத்தேர்தல் ஒன்றை இந்த ஆண்டில் நடத்த இருப்பதாக ஜனாதிபதி பீட்டர் போதா தா அறிவித்தார்.

இத்தேர்தலுக்கான திகதிகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

புத்தாண்டுச் செய்தியில் தென் ஆபிரிக்க ஜனாதிபதி போதா இதனை அறிவித்தார். (இ-எ)

சென்னையில் மீண்டும் குண்டு வெடிப்பு

தீய சக்திகளை ஒழிக்க எம். ஜி. ஆர். கோரிக்கை

சென்னை. ஜன. 3

சென்னையில் வெள்ளிக்கிழமை மாலை மற்றும் ஒரு குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. தீய சக்திகளை ஒழித்து அமைதியையும் ஒற்றுமையையும் பேணிப் பாதுகாக்குமாறு தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

சென்னை நுங்கம்பாக்கம் பஸ்நிலையத்துக்கு அருகில் இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இரண்டு நாட்களில் நடந்த இரண்டாவது குண்டுவெடிப்புச் சம்பவம் இதுவாகும்.

இச்சம்பவத்தின்போது பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த வெறும் பஸ் ஒன்று சேதம்அடைந்தது. எவரும் காயம் அடையவில்லை.

குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக தமிழக முதல்வர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் வெள்ளிக்கிழமை மதுரையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே தீய சக்திகளை ஒழிக்க உதவுமாறு பொது மக்களைக் கேட்டுக்கொண்டார்.

தமிழ் நாட்டில் சமீபத்தில் இடம் பெற்று வரும் தேச விரோத சக்திகளின் வன்முறைகளால் அப்பாவி மக்களின் உயிர்கள் பலியாவதை எம். ஜி. ஆர். கண்டித்தார்.

மதுரையில் சண்முகா நதிக்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்றை அமைக்கும் அங்குரார்ப்பண வைபவத்தில் எம். ஜி. ஆர். உரையாற்றினார்.

இதற்கிடையில் சென்னையில் வியாழக்கிழமை நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமுற்றிருந்த நபர் ஒருவர் நேற்று மரணமானார்.

வியாழன் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இறந்தோர் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது. (இ)

இ. காங்கிரஸ் தலைவர் நம்பிக்கை

சென்னை, ஜன. 3

புத்தாண்டில் இலங்கை இனப்பிரச்சினையில் நல்ல உடன்பாடு ஏற்பட்டு இலங்கைத் தமிழர் வாழ்வில் ஒளி பிறக்க வேண்டும்.

இப்படி இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு தலைவர் எம். பழனியாண்டி தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

உணர்ச்சிகளுக்கு இடந்தருவதை விட உணர்வுகளை மதித்து செயலாற்றுவதே பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று இராஜிவ் காந்தி தலைவர் விரமணி தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-எ)

வெற்றியின் இரகசியம்

"கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" (சங் 126:5)

நேசருக்கு கெம்பீரமாய் அறுப்பதற்கு ஆசை. கண்ணீரோடு விதைப்பதற்கு பிரியமில்லை! நான் முழுவதும் அரிய பெரிய காரியங்களைச் செய்து முடிக்க மிகவும் வாஞ்சை; ஆனால் அதற்காக தேவ சமூகத்தில் அமர்ந்து தெய்வீக ஆலோசனையையும் பெலனையும் பெற்றுக் கொள்ள விருப்பமில்லை!

தேவ பிள்ளையே, ஜெபமில்லாத உன் முயற்சிவீண் என்பதை நீ மறந்து போகாதே! கூர் மழுங்கின கோடரியை உபயோகித்தால் அதிக பெலனை உபயோகிக்க வேண்டியது வருமல்லவா?

அப்படியே ஜெபிக்காமல் நீ உன் காலை நடக்க விடுவாயானால், அதுவீண் பொருட் சேதத்திலும், நேர சேதத்திலும், தோல்வியிலும் போய் முடியும்!

உனக்கு அதிகமான வேலையிருக்கிறது என்பதற்காக ஜெப நேரத்தை ஒருபோதும் பலியிடாதே! "எனக்கு எப்பொழுது அதிகமான வேலையிருக்கிறதோ, அப்பொழுது அதிகமாக ஜெபிப்பேன். கர்த்தர் அத்தனை வேலைகளையும் எனக்கு எளிதாக மிகக் குறுகிய காலத்தில் செய்து தருவார்" என்று மார்டின் லூதர் சொன்னார்.

நீங்கள் ஒரு ஆலய அதிகாரியிடம்சென்று பார்க்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஜெபித்து விட்டுச் சென்றால் அவர் உங்களுக்கு எதிராக வருவார். நீங்கள் ஜெபிக்காமல் சென்றால் எவ்வளவு அலைந்தும் அவரைக் காணாமல் திரும்புவீர்கள். இது எனது அனுபவம் மட்டுமல்ல; அநேகரின் அனுபவங்களும் கூட! நேரமெடுத்து ஜெபித்துச் செல்லுங்கள்; நேரத்தை மிச்சப்படுத்தலாம்; அறிபுதத்தையும் காண்பீர்கள். அல்லேலூயா.

"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்" (சங் 37:5) ✶

ஞானக்கதிர்

செயலகத்தில் மூன்று மாடி கட்டடம்

யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ் அரசாங்க செயலக வளவினுள் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைமைக் காரியாலயத்துக்கான மூன்று மாடிக்கட்டடம் கட்டப்படவுள்ளது.

முதல் இரு மாடிகளையும் கட்டுவதற்காக இவ்வாண்டு மாவட்ட அபிவிருத்திச்சபை நிதி ஒதுக்கீட்டிலிருந்து 25 லட்சம் ரூபாவை அரச அதிபர் ஒதுக்கியுள்ளார். (அ-5)

பொன்யாமொழி



குறள்:

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பொருள்:

பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ளவேண்டும்; உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
www.noolaham.org | aavanaham.org

RADIO, T. V. & ELECTRONIC
ENGINEERING COURSE
Weekends — 7 months
.G C. E. (O/L) பரீட்சை
எழுதியவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
Fees ரூ. 250/- வீதம்
6 மாதங்களுக்கு
Cantabia Institute
Tel 21, Main Street, Jaffna.
P'hon 24201

உதயன்

04 01 1987 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
Weekends — 6 months
Fees Rs. 1500/-
Commencement 24-01-1987
Cantabia
(PIONEERS IN COMPUTER EDUCATION)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

வித்தாரம்

திப்பி, முரளி புத்தாண்டு வாழ்த்துக்கள். நீண்ட காலமாக உம்மைச் சந்திக்க முடியாமைக்கு என்னை மன்னித்துக்கொள்ளும்.

வேறை ஒண்டுமில்லை உம்மைச் சந்திக்க நேரம் எண்டு பிடிக்கிறது எனக்குப் பெரும் சங்கடமாய்ப் போச்சு. இண்டைக்கு நாளைக்கு எண்டு கடத்தினேன். பிறகு உம்மை என்ன முகத்தோடை சந்திக்கிறது எண்டு நினைச்சு நினைச்சு ஒரேயடியாய்ப் பின்னுக்கு நிண்டிட்டேன்.

புது வருடத்தோடை எப்பிடியும் சந்திக்க வேண்டும் எண்டு முடிவு கட்டித்தான் இண்டைக்கு வந்தேன். உன்னைச் சந்திக்கயில்லை எண்டு நீ எவ்வளவு கவலைப்படுகிறாயோ அதைவிடப் பல மடங்கு கவலைப்படுகினம் எங்கடை சம்பாஷணையைக் கேக்கிறவை எண்டு எனக்குத் தெரிய வந்தது.

சிலபேர் நேரடியாகவே வந்து ஏசத் தொடங்கிவிட்டினம். ஏன் நீர் இப்ப முரளித் தம்பியைச் சந்திக்காமல் இருக்கிறீர். அதான் நட்டம் எங்களுக்கெல்லே எண்டு கோபம் கொட்டிச்சினம். சரி அதை விடு . . .

* * *

எப்பிடி உம்முடை ஹொண்டாவை கோடியாலை வைச்சிட்டீர் போலே! பழையபடி சைக்கிள் தடியைத் தூக்கிவிட்டீர்!!

நேற்றைக்கு சஞ்சீவியிலை வந்த தலைப்புச் செய்தியைப் படிச்சவை பல பேர். எப்போதோ வரும் எண்டது இப்ப வந்திட்டுது எண்டு சொல்லிக் கொண்டினம்.

உமக்கு ஞாபகமிருக்கே நான் முந்தி ஒருக்கா உம்மோடை கதைக்கையிக்கை, எரிபொருள், மின்சாரம் வடக்கு வாறதை மறிக்கிற யோசினை உவர் உத்தமருக்கு இருக்கு எண்டு சொன்னது. மின்சாரத்தை வேணும்எண்டால் நாம் இந்தியாவிலை இருந்து வாங்க முடியாதோ எண்டு கேட்ட ஞாபகமும் இருக்கு

புலியள் சிவில் நிர்வாகத்தை எடுக்கப் போகினம் எண்டதாலை உவர் அச்சாணியார் ஒரு வெல் வெருட்டு வெருட்டிப் பாக்கிறார்.

எங்கடை யாழ்ப்பாணத்தார் பெட்டிசம் எழுதிறதிலையும், மகஜர் கொண்டு போறதிலையும் கெட்டிக்காரர் எண்டது அவருக்குத் தெரியும்

அப்பிடி அவை பெட்டிசனோடை, மகஜரோடை போகயிக்கை, உங்கடை பெடியளை உத்தச் சிவில் வேலைக்குப் போகவேண்டாம் எண்டு சொல்லுங்கோ. நாங்கள் தடையை நீக்கிறோம் எண்டு சொல்லியாவது உத்தச் சிவில் நிர்வாக மாற்றத்தை நிறுத்தலாம் எண்டு அச்சாணியார் யோசித்திருக்கலாம்

அவர் எங்கனவும் நினைக்கட்டும்.

எரிபொருள் தடை எண்ட உடனை பதறிப் படக்கூடாது. அதையும் தாக்குப்பிடிக்க எங்களைப் பழக்கிக் கொள்ள வேணும்

சுதந்திரம் சும்மா வாரதப்பா! அது என்ன கடையிலை வாங்கிற சுக்கா மிளகா? எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்க தயாராய் இருக்க வேணும். அனுபவிக்க வேணும். அப்பதான் அதுக்கும் மதிப்பிருக்கும். மவுசிருக்கும்.

பெடியங்கள் சுதந்திரம் வாங்கித் தருவாங்கள், நாங்கள் காரிலை சவாரி செய்து உல்லாச வாழ்க்கை நடத்தலாம்போம் எண்டு நினைக்கிற கூட்டமும் இருக்குது.

எரிபொருள் எல்லோருக்கும் முக்கியம் தான். ஆனால் அதைச் சிக்கனமாய்ப் பாவிக்கவும் அது இல்லாமலே எங்கடை வாழ்க்கையை நடத்தவும் நாம் மாற்று வழியைத் தேடவேணும்.

எங்கடை பேரன், பிட்டன் காலத்திலை எரிபொருள்கள் இருந்ததே அவை துலா மிதிச்சு விவசாயம் செய்யயில்லையே, சாப்பிடயில்லையே?

கொஞ்சக் காலத்துக்காவது நாங்கள் அந்த நிலைக்குப் போறது தான் .....

இதுகளைப்பற்றி நல்லாயோசி . . . . !

ஏகலைவி

வடபகுதி முகாம் உயர் அதிகாரிகளுடன்

கூட்டுப்படை தளபதி தீவிர ஆலோசனை

கொத்தலாவலையும் கலந்து கொண்டார்

யாழ்ப்பாணம், ஜன.4 வடபகுதி ஆயுதப்படை முகாம் உயர் அதிகாரிகளுடன் கூட்டுத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிரில் ரணதுங்க நேற்று தீவிர ஆலோசனைகளை நடத்தினார்.

ஆனையிறவு முகாமில் நடந்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில் யாழ் கோட்டை முகாமைச் சேர்ந்த கப்டன் கொத்தலாவலை உட்பட சகல படை முகாம் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பின்னர் நாவற்குழி, பலாலி முகாம்களுக்கு ஜெனரல் ரணதுங்கா சென்று பார்வையிட்டார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பணியாற்றும் படையினரை தனித்தனியாசு சந்தித்து நற்சான்றிதழ்களை கூட்டுப்படைத் தளபதி வழங்கி வருகின்றார்.

புத்தாண்டு தொடக்கம் இந்தப்பணியில் ஈடுபட்டுவரும் கூட்டுத்தளபதி, அடுத்தவாரத்துடன் நற்சான்றிதழ்களை வழங்கி முடித்து விடுவார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

இதனிடையில் படையினருக்கு விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில், "புதிய ஆண்டில் வெற்றி எமதே என்பதில் சந்தேகமே இல்லை" – என்று கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க கூறியிருக்கிறார். (இ-எ-ஐ)

இயக்கத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தை விட மக்களைப் பாதுகாக்கும் எண்ணம் வேண்டும்

சுவாமி சித்ருபானந்தா உரை

பருத்தித்துறை, ஜன 4

இயக்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணுவதை விட மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றஎண்ணம் வளர வேண்டும்.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் ஜயந்தி விழாவில் சுவாமி சித்ருபானந்தாதலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சுவாமி விவேகானந்தரின் திருவுருவச்சிலை மருதடி ஞான வைரவர் ஆலயத்திலிருந்து பக்தர்களினால் ஊர்வலமாக பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு எடுத்து வரப்பட்டது

விதிகள் தோறும் கும்பங்கள் வைத்து விசேஷ வழிபாடுகளும் பஜனைகளும் நடைபெற்றன.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சுவாமி சித்ருபானந்தா கூறியதாவது.

சுகபோகம் அனுபவிக்க வேண்டிய இளைஞர்கள் தமது தாய் நாட்டிற்காக அல்லும் பகலும் எண்ணற்ற துன்பங்களுக்கு மத்தியில் மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்

இன்றுள்ள சூழ்நிலையில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இளைஞர்களும் யுவதிகளும் மக்களைக் காக்கும் பணிக்குச் செல்லவேண்டும்

இயக்கத்தைப் பாதுகாக்க வேண்டும் [என்று எண்ணுவதை விட மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றஎண்ணம் வளர வேண்டும்.

1972ஆம் ஆண்டுமுதல் திரு. கிட்டுவும் ஏனைய தோழர்களும்பலத்த கஷ்டத்தின் மத்தியில் வளர்த்த இயக்கம் இன்று மக்கள்இயக்கமாக மலர்ந்துள்ளது.

சுவாமி விவேகானந்தர் கூட வீரம் மிக்கவர் அவர் துறவியாக இருந்த போதும் கூட வீர உணர்வுள்ளவராகவே இருந்தார்

தனது உடற்பலத்தை எண்ணியே வாழ்ந்தார். பலமான உடலிலேயே வீர எண்ணங்கள் தோன்றும்.

இன்று எமதுசமுதாயத்துக்கு தியாகமும் வீரமுமே தேவை.

எமது மண்மீட்புக்காக இதுவரை 383 வீர வேங்கைகள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளார்கள். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இன்று எம்மால் பிரார்த்திக்கப்பட்டது.

மேலும் இன்றும் வீரத்துடன்தீரத்துடன்போரரடும் ஏனைய வீரவேங்கைகளுக்கு நல்லாயுளையும் பலத்தையும்வழங்கவேண்டும் என்பதுடன் எமது யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி திரு கிட்டுவின் 27ஆவது பிறந்த தினத்தில் அவருக்கு ஆயுள் பலத்தை அளிக்க வேண்டும் என வேண்டுவது ஒவ்வொரு தமிழ் மகனினது கடமை ஆகும். கிட்டுகுறிக்கோளுடன் போராடிவரும் ஒரு போர் வீரன்.

இன்று தமிழ் மக்களைப் பிரிப்பதற்காகப் பலர் திட்டம் தீட்டுகிறார்கள். லண்டன் பி. பி. சி செய்திகள் கூட புனித இயக்கங்களைக் கூறுபோட முயல்கின்றன

தமிழ் மக்களிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படுத்தி அவர்களது குறிக்கோள்களை முறியடிக்கச் செய்யத் திட்டமிடுகின்றன.

''ஏழைகளுக்காகவன் இரக்கம் காட்டுகின்றானோ அவன் இறைவனைக் காண்கிறான் இன்று அரசினரின் கெடுபிடிகளினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்பொருள் பண்டங்களை இழந்து அகதிகளாக்கப்பட்ட நிலையில் ஏழைகளாக ஆக்கப்பட்டுள்ளனர் இப்படி சுவாமிகள் கூறினார்.

விழாவில் பருத்தித்துறை கல்லூர் வட்டத்தினர் இராணுவ கெடுபிடிகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுவாமி சித்ருபானந்தா மூலமாக நிவாரண உதவிகளை யாழ் மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி திரு. கிட்டுவின் 27ஆவது பிறந்த தினத்தில் வழங்கினார்கள்.

பருத்தித்துறை கல்லூர் வட்டத்தைச்சேர்ந்த திரு எஸ் மகாதேவாதிரு இராபஞ்சலிங்கம், திரு.ந. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (இ - 118)

மீனவர்களைத் தாக்கி மீனை அபகரித்த சிப்பாய்கள்

மண்டைதீவு கடலில் சம்பவம்

யாழ்பபாணம், ஜன 4

மண்டைதீவு கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி வந்த சிப்பாய்கள் அவர்களைத் தாக்கிவிட்டு அவர்களிடம் இருந்து மீனைப் பறித்துக் சென்றனர்.

நேற்றுக்காலை 9 மணி அளவில் இச் சம்பவம் நடந்தது.

குறிப்பிட்ட மீனவர்கள் நால்வரும் தப்பினோம் பிழைத்தோம் என கரை சேர்ந்தனர்.

இதற்கிடையில் மண்டைதீவுக் கடற்பகுதியில் படகுடன் நின்ற சிப்பாய்கள் சிலர் பொது மக்களைப் பிடித்து எச்சரித்து விடுதலை செய்தனர்.

அங்கேப் பிட்டியில் இருந்து நாவற்துறை நோக்கி படகில் வந்து கொண்டிருந்த பொது மக்களையே சிப்பாய்கள் பிடித்து எச்சரித்தனர். (இ-10)

தமிழ்ப்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்

''ஆயுதங்களைத்திருப்பி ஒப்படைப்பது இனப் பிரச்சினைப் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும். அப்படி திருப்பிக் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்'' இப்படி அமைச்சர் ஹமீத் இந்தியத் தூதுவரிடம் விண்ணப்பித்துக்கொண்டார்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண இந்திய உதவி தேவை என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். (இ-எ)

விமான..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விமானம் பயணத்தை மேற்கொண்ட போதே விபத்து நிகழ்ந்துள்ளது.

விமானம் வீழ்ந்து நொருங்கியதும் தீப்பற்றியது. மீட்புக் குழுக்கள் உடனடியாக அந்த இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இயந்திரக் கோளாறு தான் விபத்துக்கு காரணம் என நம்பப்படுகின்றது. (ஒ)

அரசு-புலி--

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

ஏனைய வி தல் அமைப்புக்கள் செயலிழந்துள்ளன ஆகவே இலங்கை அரசு தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாக தமிழீழ விடுதலைப் புலிகளையே அங்கீகரிக்க வேண்டும்–

இப்படி டாக்டர் அ[illegible] ரன் பாலசிங்கம் தெரிவித்தார் (இ-எ)

இந்தியா தனது .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தால் நாம் சொந்த வழியில் செயல்பட வேண்டி வரும்.

வடக்கில் மக்கள் ஒரு வகை சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். பேச்சுக்களும் நல்லெண்ணமும் அதிகரிக்கின்றன.

அதே நேரத்தில் கிழக்கில் அப்பாவி மக்களைக் கொல்வதில் தான் அரசு தீவிர நாட்டம் காட்டி வருகிறது.

உண்மைகளை அறியும் குழு ஒன்றை இந்தியா கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

பேச்சுக்களின் பின்னர் எத்தனையோ இராணுவ முகாம்கள் கிழக்கில் திறக்கப்பட்டு விட்டன

போராளிக் குழுக்களிடமிருந்து இந்தியாவைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது

இதை அடையும் நோக்கத்தில் தான் நேரடிப் பேச்சுக்கள் என்ற நிலையை இலங்கை அரசு தோற்று வித்திருக்கின்றது.

மன்நாட்டுத் தமிழர்களைக் கவனிக்காது இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுவது சாத்தியமானதல்ல என்பதே எம் மைப் பொறுத்த முதலாவது நிலைப்பாடு.

எந்தத் தீர்வும் இந்தியாவின் உடன்பாடு இன்றிக் [illegible] நிலைத்து பாரக்கக்கூட [illegible]

இரண்டாவது நிலைப்பாடு இப்படி திரு. பாலகுமார் பேட்டியில் சொன்னார். (இ-எ)

திருவாசக முற்றோதல்

சாவகச்சேரி, ஜன. 4

மட்டுவில் கல்வதிதுச் சின்னகோவிலில் மார்கழி ஞாயிறு தொடர்பாக சாவகச்சேரி கூட்டுப்பிரார்த்தனைச் சபையாரால் ஏற்பாடு செய்யப்பட்ட திருவாசக முற்றுதல் நிகழ்ச்சி காலை முதல் மாலைவரை நடைபெற்றது.

திரு அ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இம்முற்றோதலில் தென்மராட்சி சைவமகாசபை உறுப்பினர்களான இசைப்புலவர் சி செல்லத்துரை, சங்கீதபூஷணம் திரு. கே. விஜயித் தம்பி, திரு. முத்துக் குமாரு, பண்டிதர் வைரவிப்பிள்ளை ஆகியோர் உட்பட சுமார் 75க்கும் அதிகமான அன்பர்கள் பங்குபற்றினர். (இ-31)

● இந்தியா கவனத்துக்கு

கொழும்பு, ஜன.4

யாழ்குடா நாட்டுக்கு எரிபொருள் அனுப்பத் தடை விதித்துள்ளது குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவித்து உள்ளது.

இந்தியாவில் [illegible] தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ

புலிகளின் அறிவிப்பால் இலங்கை அரசு குழம்பியிருக்கிறது

அமிர்தன் பாலசிங்கம் கருத்து

புதுடில்லி, ஜன 4

இலங்கை அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்களுக்கு இந்திய அரசின் அனுமதி தேவை என்று புலிகள் இயக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்து இலங்கை அரசு குழம்பியிருக்கிறது.

இப்படி புலிகள் இயக்க ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார் என்று 'இந்து' செய்தி வெளியிட்டது.

இந்த நிலையில்தான் புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அரசுக்கும் இடையில் சிண்டு முடியும் நோக்கத்துடன் இலங்கை அரசு செயல்படுகிறது.

தனிவர் பிரபாகரனுக்கும் யாழ் தளபதி கிட்டுவுக்கும் இடையே தகராறு என்று பரப்பப்பட்ட செய்தி ஆதாரமற்றதும் வடிகட்டின பொய்யுமாகும்.

இப்படி திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

புலிகள் பிரபாகர் தில்கரும், இயக்கத்தில் கருத்துவேறுபாடு என்ற செய்தியை மறுத்தார். (இ-ஐ-எ)

ஜே.ஆர். அனுமதியுடன் சென்னை செல்வர்

கொழும்பு ஜன 4

ஜனாதிபதியின் அனுமதியுடன் தான் கிழக்கு மாகாண முஸ்லிம் எம்பிக்கள் சென்னை செல்வர்.

ஜனாதிபதி அனுமதி கொடுக்கா விடில் இவர்கள் சென்னைப்பயணத்தைக் கைவிடுவர். இப்படி முஸ்லிம் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் கிழக்கு மாகாண முஸ்லிம் எம்பிக்களின் முக்கிய கூட்டம் ஒன்று இவ்வாரம் கொழும்பில் நடைபெற விருப்பதாகத் தெரிகிறது

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து முக்கிய முடிவுகள் இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்படலாம் என்றும் பின்னர் முஸ்லிம் எம்பிக்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப்பேசக் கூடும் என்றும் கூறப்படுகிறது

கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் பிரதேசம் அல்ல என்று கிழக்கு முஸ்லிம் எம்பிக்கள் இந்திய இணை அமைச்சர்களிடம் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்த விஷயமும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

இக்கூட்டத்தில் சகல விஷயங்களும் ஆராயப்பட்டபின்னர் அறிக்கை ஒன்று வெளியிடப்படு என்று தெரிய வருகிறது (இ-எ-14)

பால் மாவுடன் வந்த லொறி தடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம் நோக்கி கொண்டுவரப்பட்டபால் மா வகைகள் நேற்று ஆனையிறவு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டன.

லொறியில் வந்த பெருமளவு பால் மா வகைகளை மறித்து வைத்த சிப்பாய்கள் வடபகுதியில் உள்ள முக்கிய பிரமுகர் ஒருவரின் பெயரைச் சொல்லி அவரிடம் சென்று பால் மாவைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறினர். (இ-10)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி
பாலாவி-ஆறுமுகம் சந்திரசேகரம் (திரவியம்)

பிறப்பு: 20-10-1962 அழிப்பு: 04-01-1985
இறைவனடி ஏகி ஈராண்டாகியும்
மறைந்த உன் மலர் முகத்தை நினைத்து
தவிக்கிறோம் கண்ணே.
உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.
அம்மா, தம்பி, உறவினர்கள்.

உடுவில் மகளிர் கல்லூரி

பயிற்சி நெறிகள்:

1. NATIONAL CERTIFICATE IN ENGLISH
2. Stenography (LONDON PITMAN)
3. Home Economics (ICING (EMBROIDERY (HAIRDRESSING
4. GENERAL ENGLISH
5. DIPLOMA IN ENGLISH
6. COMPUTER PROGRAMMING

மாணவிகளுக்கு விடுதி வசதி உண்டு.

பதிவு செய்தல் - 05-01-1987

Miss. R. J. MANN
இயக்குநர்
Dept.... Farther Education

நக்கீரர் பட்டியல்

பஞ்சாட்சரம் (கிச்சி)

உரும்பராய் கிழக்கு சரசாலையார் பேர்த்தியும் வடக்குச் சண்டிலிப்பாய் சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியுமான

பஞ்சாட்சரம் (கிச்சி)

சிவபதமடைந்து விட்டார்.

இவர் ராதா(லண்டன்), சிவகுமாரன்(லண்டன்), ரஜினி, ரமணி (லண்டன்), கோகிலா (லண்டன்), ரேணுகா (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும்

காலஞ் சென்ற சிவஞானம், மனோகரி, விஸ்வநாதன், சலாமா, சிவகுருநாதன், உமாசுதன் ஆகியோரின் மாமியும்

சிவரூபி, சிவயோகி, ஷிரீன், கிருஷ்ணகுமார், வித்யா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு

உரும்பராய் இளங்காடு மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றோர் மற்றோர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சிவப்பிரகாசம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் அச்சகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 04 - 01 - 1987.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60 தொலைபேசி. 24805, 22075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org